**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 49/2021**

**PROSECUTION WITNESS NO. 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : மலைய பெருமாள் | **Caste** | : |
| **Father's/Husband Name** | : கந்தசாமி நாடார் | **Religion** | : **Hindu** |
| **Village** | : **1127,** ஆட்டுமந்தை தெரு**,** கீழவாசல் | **Calling** | : மளிகைக்கடை |
| **Taluk** | : தஞ்சாவூர் | **Age** | : **59/2023** |

**(Accused 2 Present. Accused 1 and 3 absent. Petition U/s. 317(1) CrPC filed and allowed.)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.11.2023**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு** 3, **திருமதி. எம். உதயராணி,** தட்டச்சர்

**C.C.No. 49/2021 22.11.2023** **விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.30**

**முதல் விசாரணை:**

**1.** நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து மளிகைக்கடை நடத்தி வருகிறேன். கடந்த 08.01.2021 ஆம் தேதி காலை 08.00 மணியளவில் என் மகளுக்கு பொங்கல் சீர் வரிசை கொடுப்பதற்காக வீட்டிற்கு வெளியே வந்தேன். அப்போது 3 ஆண் நபர்கள் என் வீட்டிற்கு வந்து என்னிடம் நாங்கள் SP அலுவலகத்திலிருந்து வருவதாகவும், அவர்கள் 2-3 முறை நேரில் வந்து அழைத்தும் நீங்கள் வரவில்லை என்றும் கூறினார்கள். நான் அவர்களிடம் அதுபோல் யாரும் என்னை அழைக்கவில்லை என்று கூறினேன்.

2. உங்கள் மீது ஒரு வழக்கு இருப்பதாகவும், TN49BA1616 என்ற பதிவெண் கொண்ட வண்டி செங்கிப்பட்டி அருகில் ஒரு குழந்தை மீது ஏற்றி விபத்து ஏற்படுத்தியதாக வழக்கு நிலுவையில் உள்ளது என்று கூறினார்கள். அதற்கு நான் அவர்களிடம் மேற்சொன்ன வண்டி என்னுடையது என்று உங்களுக்கு எப்படி தெரியும் என்று கேட்டேன். செங்கிப்பட்டி பகுதியில் உள்ள பெட்ரோல் பங்க்கில் CCTV கேமரா பதிவு மூலம் பார்த்து தெரிந்துக் கொண்டதாக கூறினார்கள். பின்னர் என் வீட்டில் உள்ள CCTV கேமரா பதிவுகளை பார்க்க வேண்டும் என்று கூறினார்கள்.

3. நான் அவர்களிடம் எனது பெண்ணிற்கு பொங்கல் சீர் வைப்பதற்காக சென்றுக் கொண்டிருக்கிறேன் என்றும், பூமால் ராவுத்தர் தெருவில் தான் என் மகள்

**C.C.No. 49/2021 22.11.2023**

வீடு இருக்கிறது என்றும், நான் சென்று விட்டு விரைவில் வந்துவிடுவேன் என்று கூறினேன். பின்னர் நான் என் மகள் வீட்டிற்கு சென்றுவிட்டு காலை 10.30-11.00 மணியளவில் வீட்டிற்கு வந்தபோது அந்த 3 நபர்கள் வீட்டு வாசலிலே நின்றுக் கொண்டிருந்தார்கள். நானும் என் மனைவியும் வீட்டிற்குள் நுழைவதற்காக கதவை திறந்தவுடன் அந்த 3 நபர்களும் எங்களை மீறி வீட்டிற்குள் நுழைந்துவிட்டார்கள்.

4. எனது சின்ன மகள் நிவேதா ஏற்கனவே வீட்டிற்குள் தான் இருந்தார். அந்த 3 நபர்கள் உள்ளே வருவதை பார்த்துவிட்டு, எனது வீட்டிற்கு எதிரே உள்ள எனது மளிகைக்கடையிலிருந்து எனது மகன் பாலாஜி வீட்டிற்கு வந்தார். அப்போது அந்த நபர்கள் என்னிடம் CCTV பதிவுகளை காண்பிக்குமாறு கேட்டார்கள். எனது மகன் CCTV பதிவுகளை போட்டு பார்த்தபோது அதில் 15 நாட்களுக்கு மட்டும் தான் பதிவுகள் இருந்தன. அப்போது அவர்கள் எங்கள் அனைவரையும் நாற்காலியில் அமருமாறு கூறினார்கள். நாங்கள் அமர்ந்தோம்.

5. எனது மகன் பாலாஜியை மட்டும் அழைத்துக் கொண்டு ஒரு நபர் மட்டும் அவருடன் சென்றார். அப்போது கீழே இருந்த வைத்தீஸ்வரன் என்பவர் ஒரு துப்பாக்கியை எடுத்து காண்பித்து எங்களை சுட்டுவிடுவதாகவும், அமைதியாக உட்கார வேண்டும் என்று மிரட்டினார். எங்களுடைய 3 செல்போன்களையும் வைத்தீஸ்வரன் பிடுங்கிக் கொண்டார். பின்னர் என்னை மாடிக்கு வருமாறு கூப்பிட்டார்கள். என்னை மாடியில் ஒரு அறையில் வைத்து Cello tape வைத்து கட்டி வைத்துவிட்டார்கள். எனது மகன் பாலாஜியை வேறு ஒரு அறையில் அடைத்து வைத்திருந்தது அப்போது எனக்கு தெரியாது.

6. பின்னர் எனது மனைவி சாந்தியை மாடிக்கு அழைத்தார்கள். பாலாஜி இருந்த அறையிலேயே என் மனைவியையும் அடைத்து வைத்தார்கள். பின்னர் எனது மகள் நிவேதாவை மாடிக்கு அழைத்து பாலாஜி இருந்த அறையிலேயே அடைத்து வைத்தார்கள். பின்னர் மூவரில் ஒருவர் கீழே வந்து பீரோவில் இருந்த நகைகள் நெக்லஸ், ஜிமிக்கி கம்மல் மற்றும் பணம் ரூ.3,00,000/- ஆகியவற்றை எடுத்துக் கொண்டார்கள். ஒரு நபர் வீட்டு வாசலிலேயே நின்றுக் கொண்டிருந்தார். மூவரும் முகமூடி அணிந்திருந்தார்கள்.

7. அவர்களை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். 2 மணிநேரம் எங்களை அறையில் அடைத்து வைத்திருந்தார்கள். எனக்கு பதட்டம் ஏற்பட்டு

**C.C.No. 49/2021    22.11.2023**

நெஞ்சுவலி வந்துவிட்டது. அப்போது வைத்தீஸ்வரன் என்னிடம் ரூ.40,00,000/- தர வேண்டும் என்றும், இல்லை என்றால் SP உங்களை அங்கேயே வைத்து காலி பண்ணுமாறு கூறியுள்ளார் என்று மிரட்டினார்கள். எனக்கு நெஞ்சு வலி வந்ததும் அவர்கள் பயந்துவிட்டார்கள். பின்னர் நாங்கள் எங்கள் அனைவருக்கும் போடப்பட்டிருந்த cello tape யை பிரித்துவிட்டு, வீட்டிலிருந்து வெளியே வந்து மருத்துவமனை செல்வதற்கு முன்பாக மீண்டும் வீட்டிற்கு சென்று பார்த்தபோது நகை மற்றும் பணம் காணாமல் போயிருந்தன.

8. எனது கடையிலிருந்து ஊழியர்கள் என் வீட்டிற்கு வந்துவிட்டார்கள். நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. நான் கிழக்கு காவல்நிலையம் சென்று மேற்படி சம்பவம் குறித்து புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. புகார் மனுவை நான் எழுதவில்லை. போலீசார் நான் சொல்ல சொல்ல எழுதினார்கள். நான் கையெழுத்து செய்தேன். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் 15.01.2021 ஆம் தேதி போலீசார் நகை கிடைத்துவிட்டதாக தகவல் தெரிவித்தார்கள். பணம் கிடைக்கவில்லை என்று கூறினார்கள்.

9. நான் காவல்நிலையம் சென்று நகைகளை அடையாளம் காண்பித்தேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நெக்லஸ் மற்றும் ஜிமிக்கி என்னுடையது. நான் நீதிமன்றத்தில் மனு அளித்து இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றேன். **(நகைக்குண்டான புகைப்படம் அ.சா.பொ.1 ஆகவும், அதனுடன் கூடிய வட்டத்தகடு அ.சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள். **(எதிரிகள் 1, 3 ஆஜர் இல்லாததால் அவர்களை அடையாளம் காண்பிக்கும் பொருட்டு, முதல் விசாரணையின் தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.